சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.7/2022

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திருமதி. சுந்தரவள்ளி<br>த/பெ. சட்டையப்பர் | நாள்.04.07.2025 |
| வயது. 78 | வட்டம் |
| கிராமம். கூடுவாஞ்சேரி | மாவட்டம். |

<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் வழக்கில் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். உறவு முறை பட்டியல் வா.த.சா.ஆ.1. 19.1.1954 தேதியில் சட்டையப்பர் வகையறா மற்றும் பலருக்கு இடையே ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சார் பதிவு நகல் வா.த.சா.ஆ.2. 23.10.2021 தேதியில் பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.3. 1, 2 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பின் அசல் வா.த.சா.ஆ.4. வழக்குச் சொதத்திற்கான வழிகாட்டி மதிப்பீடு வா.த.சா.ஆ.5. வழக்குச் சொதத்திற்கான வில்லங்க சான்றிதழ் வா.த.சா.ஆ 6 மற்றும் 7. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)